பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
09 02 2025 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி ஃபிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு நான்கு நாள் பயணமாக நாளை புறப்பட்டுச் செல்கிறார்.

2. இந்தியாவின் இலக்கியம் மற்றும் மொழிப் பாரம்பரியத்தை உலகம் முழுவதும் கொண்டு செல்ல புத்தக வெளியீட்டாளர்கள் பாடுபட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

3. வரும் 2028ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் இருந்து விண்வெளிக்கு மனிதர்கள் அனுப்பபப்படுவார்கள் என்று இஸ்ரோ தலைவர் திரு. நாராணயன் கூறியுள்ளார்.

4. கரீபியன் கடற்பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து, போர்டாரிகா மற்றும் வெர்ஜின் தீவுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

5. துனிஷீயாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஃபிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு நான்கு நாள் பயணமாக நாளை புதுதில்லியில் இருந்து புறப்பட்டுச் செல்கிறார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக நாளை ஃபிரான்ஸ் தலைநகர் பாரீஸ் செல்லும் பிரதமர், அந்நாட்டு அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரனுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து 12ஆம் தேதி அமெரிக்கா செல்லும் பிரதமர், அந்நாட்டின் அதிபராக இரண்டாவது முறையாக பொறுப்பேற்றுள்ள திரு. ட்ரம்ப்புடன் முக்கியப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவும் என்று பாரீசில் இருந்து எமது சிறப்பு செய்தியாளர் ராஜதுரை பன்னீர்செல்வம் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தில்லியில் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி 48 இடங்களில் வெற்றி பெற்று சுமார் 27 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இதையொட்டி பிஜேபி தலைமையகத்தில் நடைபெற்ற வெற்றிக் கொண்டாட்டத்தில் பேசிய பிரதமர், நல்லாட்சியும், வளர்ச்சியும்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல்திட்டமாக உள்ளது என்றார்.

21ஆம் நூற்றாண்டில் பிறந்த இளைஞர்கள் தில்லியில் பிஜேபியின் நல்லாட்சியை முதன் முறையாக காண இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தில்லி தேர்தல் முடிவு பிஜேபியின் இரட்டை எஞ்சின் ஆட்சி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

இத்தேர்தலில் பிஜேபியின் கேடயமாக பெண் வாக்காளர்கள் திகழ்ந்ததாக குறிப்பிட்ட பிரதமர், பெண்களின் முன்னேற்றத்திற்காக அளித்த வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தார்.

<<<<>>>>

இந்திய மொழிப் புத்தகங்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கிடைக்கச் செய்வதே அரசின் நோக்கம் என மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெறும் உலகப் புத்தகத் திருவிழாவில் 41 புதிய புத்தகங்களை வெளியிட்டு அவர் பேசினார்.

இளம் எழுத்தாளர்களின் எழுத்துகளும், படைப்பாற்றலும் நமது இலக்கியங்களை செழுமைப்படுத்துவதோடு, அறிவுசார் விவாதங்களுக்கும் புதிய வழிகாட்டுவதாக இருக்கும் என்றார்.

இளம் எழுத்தாளர்கள் இந்தியாவின் கலச்சாரம், பாரம்பரியம், வரலாறு, மொழிகள் மற்றும் இலக்கியத் தூதுவர்களாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றி உள்நாட்டு மற்றும் சர்வதேச வெளியீட்டாளர்கள், இந்தியாவின் இலக்கிய மற்றும் மொழிப் பாரம்பரியத்தை உலகம் முழுவதும் உள்ள வாசிப்பாளர்களிடம் கொண்டு சேர்க்க பாடுபட வேண்டும் எனவும் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஷெட்யூல்டு வகுப்பினருக்கான பிரதமரின் சமூக உதய திட்டம், இந்த வகுப்பினர் அதிகம் வசிக்கும் கிராமங்கள் மற்றும் பயனாளிகளின் ஒட்டுமொத்த சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பிரதமரின் அஜய் திட்ட செயல்பாடுகள் குறித்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

மேலும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் அவர் மாநில மற்றும் யூனியன்பிரதேச அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தேசிய ஷெட்யூல்டு வகுப்பினர் ஆணைய தலைவர், நித்தி ஆயோக், மற்றும் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் உயர் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா, மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் ஆகியோர் பங்கேற்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வழிபட்டனர்.

இந்த கும்பமேளா இந்தியாவின் கலாச்சார செழுமை மற்றும் ஆன்மிக பாரம்பரியத்தின் அடையாளமாக திகழ்கிறது என்று ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா கூறியுள்ளார்.

இதனிடையே பிரயாக்ராஜில் உள்ள சங்கம் படித்துறையில் விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில் 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர் வீராங்கனைகள் கலந்துகொண்டு விளையாட்டு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

<<<<>>>>

வரும் 2028ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் இருந்து விண்வெளிக்கு மனிதர்கள் அனுப்பப்படுவார்கள் என்று இஸ்ரோ தலைவர் திரு. நாராணயன் கூறியுள்ளார்.

சர்வதேச விமானக் கண்காட்சியை ஒட்டி பெங்களூருவில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், 1975ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 100 ராக்கெட்டுகள் மூலம் 35 நாடுகளைச் சேர்ந்த 433 செயற்கைக்கோள்களை இஸ்ரோ செலுத்தியிருப்பதாக தெரிவித்தார்.

அடுத்தகட்டமாக ககன்யான், சந்திரயான்-4 மற்றும் சந்திரயான்-5 விண்கலன்கள் அனுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்திய விண்வெளி நிலையத்தை அமைக்கும் பணிகள் 2035ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும் என்றும் திரு. நாராயணன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக மீனவர்கள் 14 பேர் எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த இந்த மீனவர்கள், வடக்கு மன்னார் கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினர் அவர்களை சுற்றிவளைத்து கைது செய்தனர்.

மீனவர்களின் 2 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் மீனவர்கள் அனைவரும் இரனைத்தீவு கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கரீபியன் கடற்பகுதியில் கேமன் தீவு அருகே சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவில் 7 புள்ளி 6ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக போர்டாரிகா மற்றும் வெர்ஜின் தீவுகளில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது.

இதன் காரணமாக கடலோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

<<<<>>>>

துனிஷீயாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர் 6-4, 6-3 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் **Alberto-**வை வென்றார்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கட்டாக்கில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 1-0 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

<<<<>>>>

அர்ஜென்டினாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணி 3-0 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் அணி, 3-1 என்ற கோல் கணக்கில் முகமதன் அணியை வென்றது.

இன்று நடைபெறும் போட்டியில் பெங்களூரு அணி - ஜம்ஷெட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்கும்.

**<<<<>>>>**

இந்திய கைத்தறி தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் சேலம் அணி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

சேலத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கிரிக்கெட், டேபிள் டென்னிஸ், செஸ், த்ரோபால், கோகோ உள்ளிட்ட பிரிவுகளில் வெற்றி பெற்ற சேலம் கைத்தறி தொழில்நுட்பக் கழக அணியினருக்கு மாநகராட்சி ஆணையர் திரு. ரஞ்சித் சிங் பரிசுகளை வழங்கினார்.

**<<<<The End>>>>**